சாம்சங் தொழிலாளர்கள் 9-9- 2024 அன்று முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், இந்தப் போராட்டத்தை விரைவில் பேச்சுவார்த்தை மூலமாக தீர்க்குமாறு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருந்தார்கள். இதன்படி நேற்று (15.10.2024) பொதுப்பணிகள் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, சிறு, குறு, நடுத்தரதொழில்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தொழிலாளர் நலன்திறன்மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோரின் தலைமையில் பல்வேறு துறைகளின் அரசு அலுவலர்கள் இருதரப்பினரிடமும் பல்வேறு நிலைகளில் பேச்சு வார்தைகளை நடத்தினார்கள். இப்பேச்சு வார்த்தையின் பயனாக சாம்சங் நிர்வாகம், தொழிலாளர்களின் நலனைக் கருதி பல்வேறு நலத்திட்டங்கள் அறிவித்தது. தொழிலாளர்கள் தங்கள் போராட்டத்தை வாபஸ் பெற்று பணிக்குத் திரும்புவதாக அறிவித்தனர்.

ஜார்க்கண்ட்டில் 2 கட்டங்களாக வாக்குப்பதிவு:

மகாராஷ்டிரா சட்டப்பேரவைக்கு நவ.20-ல் தேர்தல்!

இந்திய தேர்தல் ஆணையம் அறிவிப்பு!

டெல்லி,அக்.16-

மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட் மாநில தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. மகாராஷ்டிரா மாநிலத்தில் சிவ சேனா (ஏக்நாத் ஷிண்டே), தேசியவாத காங்கிரஸ் (அஜீத் பவார்) மற்றும் பாஜக கூட்டணி ஆட்சி நடைபெறுகிறது. முதல்வராக ஏக்நாத் ஷிண்டேவும், துணை முதல்வர்களாக தேவேந்திர பட்நாவிசும், அஜித் பவாரும் உள்ளனர். 288 தொகுதிகளை கொண்ட மகாராஷ்டிரா சட்டசபையின் பதவிக்காலம் வருகிற நவம்பர் 26ம் தேதியுடன் முடிகிறது. அதேபோல் ஜார்கண்ட் மாநிலத்தில் ஹேமந்த் சோரன் தலைமையிலான ஜார்கண்ட் முக்தி மோர்சா-காங்கிரஸ் கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகிறது. 81 தொகுதிகளை உள்ள டக்கிய ஜார்கண்ட் மாநில சட்டசபையின் பதவிக் காலம் அடுத்தாண்டு ஜனவரி 5ம் தேதியுடன் முடிவு பெறுகிறது.

இது தொடர்பாக டெல்லியில் செய்தியாளர்களை சந்தித்து பேசிய தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார்;

மகாராஷ்டிரா தேர்தல் தேதி அறிவிப்பு

மகாராஷ்டிராவில் நவம்பர் 20-ம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறும். வேட்புமனு தாக்கல் வரும் 22-ம் தேதி தொடங்குகிறது. வேட்புமனு தாக்கல் செய்ய அக்டோபர் 29 கடைசி தேதி. வேட்பு மனுக்கள் அக்டோபர் 30ம் தேதி பரிசீலிக்கப்படும். வேட்புமனுக்களை திரும்பப்பெற நவம்பர் 4ம் தேதி கடைசி நாள். நவம்பர் 20-ம் தேதி வாக்குப் பதிவு நடைபெறும். மகாராஷ்டிராவில் வாக்காளர்களின் எண்ணிக்கை 9.63 கோடியாக உள்ளது. தேர்தலில் பதிவான வாக்குகள் நவம்பர் 23ம் தேதி எண்ணப்பட்டு அன்றைய தினமே முடிவுகள் அறிவிக்கப்படும்.

ஜார்க்கண்ட் தேர்தல் தேதி அறிவிப்பு

ஜார்க்கண்ட் மாநிலத்தில் உள்ள 81 சட்டமன்ற தொகுதிகளுக்கு இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது. ஜார்க்கண்ட் மாநிலத்தில் முதற்கட்டமாக 43 தொகுதிகளுக்கு நவ.13-ம் தேதி வாக்குப் பதிவு நடைபெறுகிறது. ஜார்க்கண்ட் மாநிலத்தில் இரண்டாம் கட்டமாக 38 தொகுதிகளுக்கு நவ.20-ம் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது. ஜார்க்கண்ட்டில் முதல்கட்டத்தில் தேர்தல் நடைபெற உள்ள தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் அக்டோபர் 18ம் தேதி தொடங்குகிறது. இரண்டாம் கட்டத்தில்

தேர்தல் நடைபெற உள்ள தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் அக்டோபர் 22ம் தேதி தொடங்குகிறது. முதல்கட்டத் தேர்தல் நடைபெற உள்ள தொகுதிகளில் வேட்புமனு தாக்கலுக்கு அக்டோபர் 25ம் தேதியும், இரண்டாம் கட்டத்துக்கு அக்டோபர் 29ம் தேதியும் கடைசி நாளாகும்.

முதல்கட்டத் தேர்தலுக்காக தாக்கல் செய்யப்படும் வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை அக்டோபர் 28ம் தேதியும், இரண்டாம் கட்டத் தேர்தலுக்காக தாக்கல் செய்யப்படும் வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை அக்போடர் 30ம் தேதியும் நடைபெறும். முதல்கட்டத் தேர்தலுக்காக தாக்கல் செய்யப்படும் வேட்புமனுக்களை திரும்பப் பெற அக்டோபர் 30ம் தேதி கடைசி நாள். இரண்டாம் கட்டத் தேர்தலுக்காக தாக்கல் செய்யப்படும் வேட்புமனுககள் திரும்பப் பெற கடைசி நாள் நவம்பர் 1. இரண்டு கட்டங்களிலும் பதிவாகும் வாக்குகள் நவம்பர் 23ம் தேதி எண்ணப்பட்டு அன்றைய தினமே முடிவுகள் அறிவிக்கப்படும்.

வயநாடு மக்களவைத் தொகுதி தேர்தல் அறிவிப்பு

நவ. 13-ம் தேதி வயநாடு மக்களவை தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெறுகிறது. வேட்புமனு தாக்கல் வரும் 18ம் தேதி தொடங்குகிறது. வரும் 25ம் தேதி வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாளாகும். தாக்கல் செய்யப்படும் வேட்புமனுக்கள் வரும் 28ம் தேதி பரிசீலிக்கப்படும். வேட்புமனுக்களை திரும்பப் பெறுவதற்கான கடைசி நாள் வரும் 30ம் தேதி. நவம்பர் 13ம் தேதி தேர்தலில் பதிவாகும் வாக்குகள் நவம்பர் 23ம் தேதி எண்ணப்பட்டு அன்றைய தினமே முடிவு அறிவிக்கப்படும். ரேபரேலி தொகுதியில் வெற்றி பெற்றதை அடுத்து வயநாடு தொகுதி எம்.பி. பதவியை ராகுல் காந்தி ராஜினாமா செய்திருந்தார். வயநாடு தொகுதி எம்.பி. பதவியை ராகுல் காந்தி ராஜினாமா செய்திருந்த நிலையில் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

புருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சி ஹவுசிங் போர்டு சேக்காடு தரைபாலம் , அன்னனூர் ரயில்வே மேம்பாலத்திற்கு ஏரிக்கு செல்லும் கால்வாயிலிருந்து மழை நீரை வெளியேற்றும் பணிகள், பூந்தமல்லி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இருந்து மழைநீர் வெளியேற்ற பணிகள் திருவேற்காடு கோ-வா ஆப்ரேட்டிவ் நகர் பகுதியில் தேங்கியிருக்கும் மழை நீரை அகற்றும் பணிகளையும் நகர்புற உள்ளாட்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பார்வையிட்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரபு சங்கர், பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, வேளாண்மை துறை இயக்குனர் முருகேஷ், ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார் ஆவடி மாநகராட்சி ஆணையர் கந்தசாமி, நகர மன்ற தலைவர்கள் ஜி.ராஜேந்திரன், அமுதாபேபிசேகர், ஜோதிலட்சுமி நாராயணபிரசாந்த், என்.இ.கே.மூர்த்தி, காஞ்சனா சுதாகர், ஜி.ஜெரால்டு, சன்பிரகாஷ், ஜி.ஆர். திருமலை, ப.ச.கமலேஷ், ஜி.நாராயண பிரசாத், பொன்விஜயன், உள்பட மாநகராட்சி நகராட்சி அதிகாரிகள் மாமண்ட நகர மன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

ஆவடி, பூந்தமல்லி, திருவேற்காடு பகுதிகளில்

மழை நீரை வெளியேற்ற - அமைச்சர்கள் கே.என்.நேரு, ஆவடி சா.மு.நாசர் நடவடிக்கை!

திருவள்ளூர், அக். 16

பருவமழை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சி பூவிருந்தவல்லி நகராட்சி திருவேற்காடு நகராட்சி உட்பட ஹவுசிங் போர்டு பகுதியில் சேக்காடு தரைபாலம் பகுதி, அன்னனூர் ரயில்வே மேம்பாலத்திற்கு ஏரிக்கு செல்லும் கால்வாயிலிருந்து மழை நீரை வெளியேற்றும் பணிகளை பூவிருந்தவல்லி சென்னீர்குப்பம், பெரியார் நகர், 15 வார்டு கோ வா ஆப்ரேட்டிவ் நகர் பகுதிகளில் தேங்கியிருக்கும் மழை நீரை நகர்ப்புற உள்ளாட்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு, சிறுபான்மையினர் நலத் மற்றும் வெளிநாடு வாழ் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆய்வு மேற்கொண்டார்கள் அப்போது நகர்ப்புற உள்ளாட்சித் துறை அமைச்சர் செய்தியாளர்களுக்கு தெரிவிக்கையில்,

ஆவடி மாநகராட்சி மெயின் ரோட்டில் தண்ணீர் நீக்குவதால் 15 அடி வாய்க்கால் வெட்டினால் ரூ.3.00 கோடி செலவாகும் அதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஹவுசிங் போர்டில் 15 அடி அகலத்தில் கட்டிடம் ஒன்று கட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள் அதற்கு ரூ. 20.00 கோடி செலவாகும் இரண்டும் சேர்த்து ரூ.23.00 கோடி முதலமைச்சரின் அனுமதியோடு வாங்கி கொடுக்கப்படும்.

ஆவடியில் இனிமேல் தண்ணீர் நிற்காது. ஒரு கால் வாயில் ஆக்கிரமிப்பு இருக்கிறது. அதையும் எடுத்து விட்டால் இந்த மூன்று வேலையும் முடிந்த பிறகு தண்ணீர் நிற்காது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதை ஆய்வு செய்து ஆக்கிரமிப்பு நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வார். ரயில்வே பிரிட்ஜ் பக்கத்தில் தேவையான அளவு குழாய்கள் பதிக்கப்பட்டு பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது வருங்காலத்தில் ரோடு அகலப்படுத்தும் பணி நடைபெற்றாலும் கூட எந்த பிரச்சினையும் வராது அந்த அளவிற்கு பணிகள் நடைபெற்று வருகிறது என அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் பிரபு சங்கர், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, வேளாண்மை துறை இயக்குனர் முருகேஷ், ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார் ஆவடி மாநகராட்சி ஆணையர் கந்தசாமி, நகர மன்ற தலைவர்கள் மண்டல குழு தலைவர்கள் ஜி.ராஜேந்திரன், அமுதாபேபிசேகர், ஜோதிலட்சுமி நாராயணபிரசாந்த், என்.இ.கே.மூர்த்தி, காஞ்சனா சுதாகர், மாநில மாணவரணி இணைச் செயலாளர் ஜி.ஜெரால்டு, மாநகர நகர ஒன்றிய கழக செயலாளர்கள் சன்பிரகாஷ், ஜி.ஆர்.திருமலை, ப.ச.கமலேஷ், ஜி.நாராயண பிரசாத், பொன்விஜயன், உள்பட மாநகராட்சி நகராட்சி அதிகாரிகள் மாமண்ட நகர மன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

நேற்று ஒரே நாளில் - தமிழ்நாடு முழுவதும்

1000 இடங்களில் - மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, அக்.16-

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு முழுவதும் நேற்று ஒரே நாளில் 1000 இடங்களில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடைபெற்றன. முகாம்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன் நேற்று (15.10.2024) சென்னை, தேனாம்பேட்டை மண்டலம், மயிலாப்பூர், கார்னேஸ்வரர் பகோடா தெரு, சமுதாய நலக்கூடத்தில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினைத் தொடங்கி வைத்தார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

வடகிழக்கு பருவமழை தொடங்கி உள்ள நிலையில் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, வடகிழக்கு பருவமழைகளை ஒட்டி ஏற்படுகின்ற நோய்களை தடுப்பதற்கு உண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப இன்று ஒரே நாளில் தமிழ்நாடு முழுவதும் 1000 இடங்களில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் தொடங்கப்பட்டுள்ளது. காலை 9 மணிக்கு தொடங்கி பிற்பகல் 4 மணி வரை நடைபெறும் இம்முகாம்களில் மக்கள் பயன்பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். குறிப்பாக மழைக்காலங்களில் வருகின்ற நோய்களான டெங்கு, மலேரியா, டைபாய்டு போன்ற காய்ச்சல் பாதிப்புகளுக்கு இம்முகாம்களில் சிகிச்சைகள் வழங்கப்பட உள்ளது. அதேபோல் மழைக்காலங்களில் ஏற்படுகின்ற வயிற்றுப்போக்கு, வாந்தி போன்ற நோய் பாதிப்புகளுக்கும், சேற்றுப்புண் போன்ற பாதிப்புகளுக்கும் மருந்துகள் வழங்கப்பட உள்ளது.

மேலும் தேவையான அளவிற்கு மருந்துகள் கையிருப்பில் இருக்கின்றது. சென்னையைப் பொறுத்தவரை 100 இடங்களில் இம்மருத்துவ முகாம்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் 1000 இடங்களில் இம்முகாம் நடத்தப்பட்டு வருகிறது. மேலும் கிராமமோ அல்லது நகரமோ அல்லது ஏதாவது தெருக்களிலோ ஒன்றுக்கும் மேற்பட்டவர்களுக்கு காய்ச்சல் பாதிப்புகள் இருக்குமேயானால் அந்த பகுதிகளில் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்த சுகாதாரத் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. நேற்று மாவட்ட அளவிலான சுகாதாரத்துறை உயரலுவலர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் காணொளி

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (15.10.2024) பருவமழை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழ்நாடு முழுவதும் 1000 மருத்துவ முகாம்கள் நடைபெறுவதைத் தொடர்ந்து தேனாம்பேட்டை மண்டலம் மயிலாப்பூர், கார்னேஸ்வரர் பகோடா தெரு, சமுதாயக்கூடத்தில் மருத்துவ முகாமினை தொடங்கி வைத்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்ச்சியில், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கப்பாண்டியன் அவர்கள், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, துணை மேயர் மு.மகேஷ்குமார், நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மருத்துவர் டி.சி.செல்வவிநாயகம், மாமன்ற உறுப்பினர் அ.ரேவதி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

வாயிலாக நடத்தப்பட்டது. பொதுவாக இந்த ஆண்டு குளிர்கால மழையாக இருந்தாலும், கோடை வெப்ப மழையாக இருந்தாலும், வெப்பச்சலன மழையாக இருந்தாலும், தென்மேற்கு பருவமழையாக இருந்தாலும் பெய்யும் அளவினை விட கூடுதலாக பெய்வது தொடர்ந்து வருகிறது. அந்தவகையில் வடகிழக்கு பருவமழையும், இயல்பை விட கூடுதலாக இருக்கும் என்று வானிலை ஆராய்ச்சி மையத்தால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவேதான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 10க்கும் மேற்பட்ட சேவைத் துறைகளை ஒருங்கிணைத்து மிகப்பெரிய கூட்டத்தை நடத்தி, வடகிழக்கு பருவமழையினை எவ்வாறு எதிர்கொள்வது, அதனால் ஏற்படும் பாதிப்புகளை எவ்வாறு தடுப்பது, வடகிழக்கு பருவமழை காலங்களில் ஏற்படுகின்ற நோய் பாதிப்புகளை தடுப்பது தொடர்பாக கூட்டம் நடத்தி அறிவுறுத்தியிருந்தார்கள்.

கோபாலபுரம், சிந்தாதிரிபேட்டை பகுதிகளில் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் 1000 முதல் 1500 பேர் வரைக்கும் சமைப்பதற்கு அதிநவீன சமையல் கூடமும் தயார்நிலையில் இருக்கின்றது. இப்படி சென்னையில் வடகிழக்கு பருவ மழையினால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து பொதுமக்களை பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகள் அனைத்தும் தயார்நிலையில் இருக்கின்றது. மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் கடந்த 2 நாட்களாக இரவு, பகல் பாராமல் அடையார் பங்கிங்காம் கால்வாய் முகத்துவாரம், கூவம் முகத்துவாரம் போன்ற பல்வேறு பகுதிகளில் கடலில் நீர் கலக்கும் பகுதிகளில் மழைநீர் தடையின்றி செல்வதற்குரிய வழிவகைகளை நேரிடையாகவே ஆய்வு செய்து வருகிறார்கள். நேற்று இரவு 12 மணியளவில் மழை பெய்து கொண்டிருந்தாலும் துணை முதல்வர் அவர்கள் பம்பரமாக சுழன்று மழைக்கால தடுப்பு பணிகளை ஆய்வு செய்து வருகிறார்கள். எனவே மழைக்கால நோய் பாதிப்புகளி லிருந்து மக்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

மருந்துத் தட்டுப்பாடு இல்லை!

நேற்று சேலம் மாவட்டத்தில் பல்வேறு மருத்துவ கட்டிடங்களை திறந்து வைத்திருந்தோம். எடப்பாடி தொகுதியில் கூட 5 மருத்துவ கட்டிடங்களை திறந்து வைத்தேன். அந்த பகுதியில் சுமார் 4000 பேர் பங்கேற்றிருந்தார்கள். அந்த நிகழ்ச்சியில் நான் சொன்னது இந்த அரசு பொறுப்பேற்றபிறகு அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பாம்புக்கடிக்கும், நாய்க்கடிக்கும் மருந்து கடந்த 2 ஆண்டுகளாகத்தான் இருந்தது. வேறு எந்த காலத்திலும் மருந்துகள் இல்லை. அவர் எப்போதாவது பதில் சொல்லியிருக்கிறாரா? எங்களுடைய கேள்விகளுக்கு இதுவரை அவர் பதில் சொன்னதில்லை, பொதுமக்களிடம் நான் சொன்னேன், உங்கள் எம்.எல்.ஏ. தான் மருத்துவமனைகளில் மருந்துகள் இல்லை என்று சொல்கிறார். ஆனால் எந்த மருத்துவமனை என்று ஆய்வு செய்ய மாட்டார். அவரை ஆய்வு பன்ன சொல்லுங்க. போகும் வழியில் எல்லாம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம், துணை சுகாதார நிலையம் என நிறைய இருக்கிறது. எங்கு மருந்துகள் தட்டுப்பாடு இருக்கிறது என்று ஆய்வு பன்ன சொல்லவும். அவர் சார்பில் பொதுமக்கள் ஆகிய நீங்கள் எந்த மருத்துவமனையில் மருந்து தட்டுப்பாடு இருக்கிறது என்று ஆய்வு பன்னவும். மேலும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் இரவு, பகல் பாராமல் மழைக்கால முன்னெச்சரிக்கைகளை தொடர்ந்து பார்வையிட்டு வருகிறார். அதுபோன்று எடப்பாடி அவர்கள் இரவு நேரங்களில் ஏதாவது ஒரு பகுதிக்கு சென்று பார்வையிட்டு இருக்கிறாரா? என்று எடப்பாடியிடம் கேட்டு சொல்லவும்.

இலவச கட்டணமில்லா தொலைபேசி எண்

104 என்னும் இலவச கட்டணமில்லா தொலைபேசி மூலம் குறைகளை தெரிவிக்கலாம், 40க்கும் மேற்பட்ட இணைப்புகள் தயார்நிலையில் இருக்கின்றது. சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை 1913 கட்டணமில்லா தொலைபேசி எண் பயன்பாட்டில் இருக்கின்றது. 150 இணைப்புகள் தயார்நிலையில் இருக்கின்றது.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

திருவள்ளூர் மாவட்டம் - ஆவடி, திருவேற்காடு பகுதிகளில்

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கொட்டும் மழையில் ஆய்வு!

திருவள்ளூர், அக். 16-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுன்படி வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆவடி மாநகராட்சி திருவேற்காடு நகராட்சி பகுதிகளில் உள்ள பல்வேறு இடங்களில் சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆவடி மாநகராட்சி ஸ்ரீராம் நகர் சத்திய நகர் சேக்காடு திருவேற்காடு நகராட்சி ராஜாங்குப்பம் எஸ்.பி. குடியிருப்பு பகுதிகளில் கொட்டும் மழையில் நேரில் பார்வையிட்டு மற்றும் கால்வாய்கள் தரை பலம் மேம்பாலும் உள்ளிட்ட பகுதிகளில் தேங்கியிருக்கும் மழை நீரை ராட்சத எந்திரம் மூலம் நீரே வெளியேற்றும் பணியில் ஈடுபட்டு மற்றும் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை உடனடியாக கண்காணிக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் தெரிவித்து மேலும் தேங்கியிருக்கும் மழை நீர் குப்பைகள் உடனடியாக அகற்ற வேண்டும் என்று தெரிவித்தார்.

உடன் ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார் ஆவடி மாநகராட்சி ஆணையர் கந்தசாமி, நகர மண்டல தலைவர்கள் ஜி.ராஜேந்திரன், ஜி.நாராயண பிரசாத், என்.இ.கே.மூர்த்தி உள்பட அரசு அதிகாரிகள், மாநகராட்சி, நகராட்சி ஊழியர்கள், மாமன்ற நகர்மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டப் பகுதிகளில்

வடகிழக்குப் பருவ மழையையொட்டி வாரியத்தால் முன்னெச்சரிக்கை நடவடிக்கை!

சென்னை, அக். 16 -

தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டப்பகுதிகளில் வடகிழக்கு பருவ மழையையொட்டி அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் 209 திட்டப்பகுதிகளில் 1.20 இலட்சம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

குடியிருப்புதாரர்களின் வசதிக்காக வாரியத் தலைமை அலுவலகத்தில் 24 மணி நேரமும் தொலைபேசி வசதியுடன் (044 - 29862104) இயங்க கூடிய கட்டுப்பாட்டு அறை செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும், திட்டப்பகுதிகளில் தேங்கும் மழைநீரினை வெளியேற்றுவதற்கு ஏதுவாக பம்ப்செட்டுகள், மண் நிரப்பும் இயந்திரங்கள் ஆகியவை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. மின்தூக்கி வசதிகள் உள்ள திட்டப்பகுதிகளில் போதுமான டீசல் (எரிப்பொருள்) கொள்முதல் செய்யப்பட்டு கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளது.

வாரியத்தால் ஏற்கனவே எச்சரிக்கை செய்யப்பட்ட சிதிலமடைந்த குடியிருப்புகளில் உள்ள குடியிருப்புதாரர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும்மாவட்டநிர்வாகத்தால் ஏற்பாடு செய்துள்ள நிவாரண முகாம்கள், பள்ளிகள் மற்றும் சமுதாய கூடங்களில் தங்கிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், இவர்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்கள் வழங்குவதற்கும் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

பெரும்பாக்கம், ஒக்கியம் துரைப்பாக்கம் கண்ணகி நகர் திட்டப்பகுதிகளில் வசித்து வரும் குடும்பங்களுக்கு பருவமழையால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை எதிர் கொள்ள 10hp திறன் கொண்ட 10 மோட்டர்கள், 125 kv திறன் கொண்ட 2 ஜெனரேட்டர்கள் மற்றும் 3 மண் நிரப்பும் இயந்திரங்கள்(JCB) தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் பொருட்டு போதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மழைக்கு பின் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்கு வாரியம், சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மேலும், பருவ மழையால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்ளும் வகையில் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் 24 மணி நேரமும் வாரிய அலுவலர்கள் பணியில் இருக்கும் வகையில் சுழற்சி முறையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை - நுங்கம்பாக்கம் பள்ளி சாலையில் தயாநிதி மாறன் எம்.பி. ஆய்வு செய்தார். அருகில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு மற்றும் பலர் உள்ளனர்.